# புலிவேட்டை நியாயமா?

யுவ்ராஜ்

நீலகிரியில் நடந்த, புலிவேட்டை தமிழ்நாட்டை மட்டுமல்ல ஜீவகாருண்ய உலகத்தையே உலுக்கியிருக்கிறது!

மனிதர்களை வேட்டையாடி வந்த புலியை 18 நாட்களுக்குப் பிறகு சுட்டுப் பிடித்திருக்கிறது வனத்துறை. ஆனால் இது சட்டத்திற்கு புறம்பானது என்று கூறுகின்றனர் வன ஆர்வலர்கள்.



யோகநாதன்

நீலகிரி மாவட்டம் உதகையில் கடந்த ஜனவரி 4-ம் தேதி கவிதா என்ற பெண், புலி தாக்கி பலியானார். ஆறாம் தேதி சின்னப்பன் என்பவரை புலி கொன்றது. எட்டாம் தேதி முத்துலட்சுமி என்பவரை அடித்துக் கொன்றது புலி. இந்தப் புலியை பிடிப்பதற்காக வனத் துறையுடன் இணைந்து மாவட்ட நிர்வாகம், காவல்துறை, அதிரடிப்படை, கும்கி யானை என பெரிய படையே களம் இறங்கியது. ஆனால் புலி மட்டும் பிடிப்படவேயில்லை.

புலியின் நடமாட்டத்தைக் கண்டறிய 22 இடங்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டன. அதில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்த வனத்துறை அதிகாரிகள், அது பெண் புலி என்றும், தலை மற்றும் கால் பகுதிகளில் காயம் உள்ளதால் மற்ற விலங்குகளை வேட்டையாட முடியாத நிலையில்தான், சுலபமாக மனிதர்களை வேட்டையாடி வருவதாகக் கூறினர். பதினெட்டு நாட்களுக்குப் பிறகு, கடந்த 22-ம் தேதி தொட்டபெட்டா அருகே உள்ள குந்தசப்பை கிராமப் பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் பதுங்கி இருந்த புலியை அதிரடிப்படை வீரர்கள் உதவியுடன் சுட்டுக் கொன்றனர் வனத்துறையினர். ஆனால் கடந்த பதினெட்டு நாட்களாக மனிதர்களை வேட்டையாடியது பெண் புலி என்று கூறி வந்த வனத்துறையினர் தற்போது சுட்டுக் கொன்றிருப்பதோ பத்து வயது மதிக்க தக்க ஆண் புலியை!



உண்மையில் மனிதர்களை வேட்டையாடிய புலியைத்தான் வனத்துறையினர் சுட்டுக்கொன்றார்களா அல்லது வேறு புலியை சுட்டுக் கொன்றார்களா என்று கேள்வி எழுப்புகின்றனர் வன ஆர்வலர்கள்.

இது குறித்து வன ஆர்வலரான யோகநாதனிடம் பேசினோம்.

"வன விலங்கை வேட்டையாட நமது நாட்டில் தடை உள்ளது. வன விலங்கை வேட்டையாடுவது சட்டப்படி குற்றம். அப்படி இருக்கும் பட்சத்தில் தேசிய விலங்கான புலியை எப்படி சுட்டுக் கொன்றார்கள்? புலியை சுட்டுக்கொல்ல வேண்டுமானால் 1972 வன விலங்கு பாதுகாப்பு சட்டத்தின் படி, தலைமை வன உயிரின பாதுகாப்பாளரிடம் அனுமதி பெற வேண்டும். ஆனால் உதகையில் நடந்த சம்பவத்தின் போது இந்த நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பது இதுவரை தெரியவில்லை.



சுட்டுக் கொல்லப்பட்ட புலி...

மக்களின் பாதுகாப்புக்காகத் தான் புலியை சுட்டுகொன்றதாக வனத்துறை அதிகாரிகள் கூறுகின்றனர். இன்றைய நவீன காலத்தில் மயக்க ஊசி செலுத்தி எளிதாக அந்தப் புலியைப் பிடித்திருக்க முடியும். ஆனால் அதை விட்டுவிட்டு சுட்டுக்கொன்றது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத பாதக செயல். அதிலும் ஏதோ பெரிய தீவிரவாதியைப் போல் புலியை கண்ணில் கண்டவுடன் 30 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்திப் பிடித்திருக்கிறார்கள். இதில் இருந்தே வன விலங்குகள் மீதான வனத்துறையினரின் வெறித்தனம் தெரிகிறது.

முதுமலை - சத்தியமங்கலம் இடைப்பட்ட பகுதியை புலிகள் சரணாலயமாக அறிவிக்க வேண்டுமென வன ஆர்வலர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர். ஆனால் வனத்துறை இதுகுறித்து எந்தப் பேச்சுவார்த்தையும் வன ஆர்வலர்களுடன் நடத்தவில்லை. இந்த பகுதியில்தான் புலி, சிறுத்தை, யானை, அரிய வகையான சிறுகொம்புமான். உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன. அவற்றைப் பாதுகாக்க வேண்டிய வனத்துறையே இன்று ரிசார்ட்டுகள் அமைப்பதற்கு அனுமதி அளிக்கிறது. அதனால்தான் காடுகள் சுருங்கிக்கொண்டே போகிறது. அதனால் தான் வன விலங்குகள் காட்டை விட்டு வெளியே வருகின்றன.

இன்று மனிதர்களை வேட்டையாடும் விலங்குகளை மனிதர்களும் வேட்டையாடுகின்றனர். அதற்கு ஒரு உதாரணம் உதகை சம்பவம். விலங்குகளின் வசிப்பிடத்தில் மனிதர்கள் வசிக்கிறார்கள். அதனை ஏற்றுக்கொள்ளாமல் வன விலங்கால் மனிதர்களுக்கு ஆபத்து என்பதை எப்படிக் கூற முடியும்?

> உண்மையில் மனிதர்களை வேட்டையாடிய புலியைத்தான் வனத்துறையினர் சுட்டுக்கொன்றார்களா அல்லது வேறு புலியை சுட்டுக் கொன்றார்களா?

முதலில் வனம், வன விலங்கு தொடர்பான விஷயத்தில் தொலை நோக்குப் பார்வையோடு செயல்பட வேண்டும் என்பது தான் எங்களைப் போன்ற வன ஆர்வலர்களின் கருத்து. இந்த உலகம் என்பது மனிதர்களுக்கு மட்டுமே ஆனது அல்ல என்பதை மனிதர்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். மனிதர்களை வேட்டையாடிய புலியைப் பிடித்திருக்க வேண்டுமே தவிர கொன்றிருக்கக் கூடாது" என்றார் யோகநாதன்.

வனத்துறை அதிகாரிகளோ, "கொல்லப்பட்ட புலி, மனிதர்களை வேட்டையாடிய புலி தான். மனிதர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமை எங்களுக்கு இருப்பதால்தான் சுட்டுக்கொன்றோம்" என்றனர்.

ஆனால்... ''கொடநாட்டில் அம்மா இருக்கும்போதே மக்கள் பிரச்னையை தீர்த்ததாகக் காட்டவேண்டும் என்பதற்காக அவசர அவசரமாக ஒரு புலியை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்" என்ற குரல் வனத்துறைக்குள்ளேயே வலம் வருகிறது! ■